அரண்மனை நிர்வாகத்திற்கு ரூ.3 கோடியை உயர்த்தி ரூ.6 கோடியாக வழங்கிய முதல்வருக்கு நன்றி!

# நேமம் - வளப்பக்குடி - வல்லம் ஏகௌரி அம்மன் கோவில் இடங்களில் திருமண மண்டபங்கள் கட்டி தாரீர்!

## சட்டப் பேரவையில் திருவையாறு துரை சந்திரசேகரன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 1-

இந்து சமயம், வணிகவரி பத்திரப்பதிவு மற்றும் சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கையில், திருவையாறு தொகுதி உறுப்பினர் - துரை. சந்திரசேகரன் பேசியதாவது:-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா, நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் இயக்கத்திற்கு தலைமை பொறுப்பேற்றது முதல் தொடர் வெற்றிகளைப் பெற்று வருபவர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 வெற்றி பெற்று இந்தியாவின் நம்பர் 1 முதல்வராக விளங்கும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் முழுவதும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் மக்கள் கடலில் நீந்தி தேர்தல் பிரச்சாரம் செய்து 40க்கு 40 வெற்றியை உறுதி செய்த எங்கள் இளம் தலைவர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்டத்து பொறுப்பு அமைச்சர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர், அரசு கொறடா, சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் வணக்கம்.

இந்த 3 முக்கியத் துறைகளில் மிக முக்கியமாக நமது இந்து சமய அறநிலையத் துறையில் என்னுடைய கருத்துகளை முதலில் சிலவற்றை எடுத்து வைக்கின்றேன். நீதிக்கட்சி ஆட்சியில் 1927ல் மதராஸ் இந்து சமய அறநிலைய வாரியம் என்று அன்றைய முதல்வர் பனகல் அரசரால் கொண்டு வரப்பட்டது. அன்றைக்கும் சில இந்து அமைப்புகள் எதிர்த்தன. எதிர்ப்பை மீறி பனகல் அரசர் ஆங்கிலேயே வைசிராய் இர்வின் பிரபுவிடம் ஒப்புதல் பெற்று சட்டமாக்கினார். நீதிக்கட்சி ஆட்சியில் தொடங்கப்பட்ட இந்த சமய அறநிலையத் துறை பல்வேறு பரிணாம வளர்ச்சி பெற்று இன்றைய திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சரின் வழிகாட்டுதலில் மிகச் சிறப்பாக இத்துறை பொது மக்கள், பக்தர்கள் ஆன்மிகத் தலைவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

நீண்டகாலமாக ஓடாமல் இருந்த திருவாரூர் அருள்மிகு தியாகராஜர் கோவில் ஆழித்தேரை ஓட்டிக் காட்டியவர் நம்முடைய ஐயா கலைஞர் அவர்கள். அவர் வழி வந்த திராவிட மாடல் ஆட்சியில் நம்முடைய முதல்வரின் சீரிய வழிகாட்டுதலில் 17 ஆண்டுகளாக ஓடாமல் சமூகநீதியான பிரச்சினை யால் நின்றுபோன கண்டதேவி தேரோட்டத்தை அனைத்து சமூகத்தினரும் நல்லிணக்கத்துடன் பங்கேற்கச் செய்து தேரோட்டிக் காட்டிய அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு. அதேபோன்று பல மாவட்டங்களில் ஓடாத தேரை ஓட்டிய பெருமை நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு இருக்கிறது. உதாரணமாக, விழுப்புரம் மாவட்டம் நரசிம்ம சுவாமி கோவில் 150 வருடங்களாக அந்தத் தேரோட்டம் நின்றது. அதை இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருடைய தொகுதியில் ஆதிகேசவப் பெருமாள், சென்னையிலுள்ள சிந்தாதிரிப்பேட்டையில் 87 ஆண்டுகளாக ஓடாத தேரை நம்முடைய துறை ஓட்டிக் காட்டியிருக்கிறது. எனவே, மிகச் சிறப்பாக இந்த இந்து சமய மற்றும் அறநிலையத் துறை ஆட்சி செய்து வருகிறது. நீதிக்கட்சி காலத்தில் ஒலித்த அதே மதவாத சக்திகள் திராவிட மாடல் ஆட்சிக் காலத்திலும் இந்து கோவில்களை மீட்போம் இந்து கோவில்களை நிர்வாகம் செய்ய அரசுக்கு என்ன வேலையென்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

### திருக்கோயில்களுக்கு திருப்பணிகள்!

எங்கள் திராவிட மாடல் முதலமைச்சர் ஆட்சியில் 7.5.2021 முதல் 31.3.2024 வரை கடந்த மூன்றாண்டு கால ஆட்சியில் 740 திருக்கோயில்களின் அசையாச் சொத்துக்களை தனியார்வசம் ஆக்கிரமிப்பிலிருந்து 6,324 ஏக்கர் வேளாண் நிலங்கள்; 1,261 ground காலிமனைகள்;

187 ground பரப்பிலான கட்டடங்கள்; 137 ground திருக்கோயில் குளக்கரைப் பகுதிகள் மீட்டெடுக்கப்பட்டு திருக்கோயில் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சொத்துகளின் மதிப்பு 5,813 கோடி ரூபாய் ஆகும். திராவிட model அரசு பொறுப்பேற்றது முதல் 12.6.2024 வரை, 1,775 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மிகச் சிறப்பாக திருக்குட நன்னீராட்டு விழா நடத்தப்பட்டுள்ளது. நம்முடைய தருமபுரி ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் போல, எப்படி திருக்கோயில்களை அவர்கள் காத்து வருகின்றனரோ, முறைப்படி அதை நடத்துகின்றனரோ, எப்படி அந்த சொத்துகளைப் பாதுகாக்கிறார்களோ, எப்படி அந்த விக்கிரகங்களைப் பாதுகாக்கிறார்களோ, அதைப்போல நம்முடைய திராவிட model அரசு, நம்முடைய முதல்வர் அவர்கள் வழிகாட்டுதலில், இன்றைக்கு சிறந்த நல்ல ஆதீனத்தை, நம்முடைய அமைச்சராக நியமித்தி ருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டு அரசின் நல்ல ஆதீனமாக அவர் செயல்பட்டு வருவதை எல்லோரும் அறிந்துள்ளனர்; எல்லோரும் பாராட்டு கின்றார்கள்; எல்லோரும் பாராட்டுகின்ற அளவிற்கு அந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

### தஞ்சாவூர் பெரிய கோயில்!

அதேபோல, தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தின் கட்டுப்பாட்டில் 88 திருக்கோயில்கள் இருக்கின்றன. அதில், தஞ்சாவூர் பெரிய கோயிலும் ஒன்று. அதேபோல, புன்னை நல்லூர் மாரியம்மன் கோயில். இந்த இரண்டு கோயில்கள் தான் வருமானம் உள்ள கோயில்கள். அதை போன்ஸ்லே இராஜா நிர்வகிக்கி றார்கள். அரண்மனை தேவஸ்தானத்திடம் பணமே கிடையாது. அவர்களிடமும் பணமே கிடையாது. ஆனால், பல கோயில்கள், 88 கோயில்கள் பிரசித்தி பெற்ற கோயில்கள். அந்த



அனைத்து கோயில்களிலும் அர்ச்சகர்களுக்கே சம்பளம் வழங்காத நிலை; விளக்கு போட முடியாத நிலை; ஒரு கால பூஜை கூட நடத்த முடியாத பெரிய பெரிய கோயில்கள் எல்லாம் இருந்ததை, நாங்கள் யாரும், நானோ, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ அல்லது துறையின் அமைச்சரோ யாரும் கோரிக்கை வைக்கவில்லை. ஆனால், முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை review செய்கிறபோது, தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்கள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்பதை உணர்ந்து, புதிய நேர்வாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 88 கோயில்களில் இருந்த அர்ச்சகர்கள் ஊதியம், பூஜைகள் செய்ய, கோயில்களில் விளக்கு எரிய, முதன்முறை யாக 2022-2023 ஆம் நிதி யாண்டில் 3 கோடி ரூபாய் அரசு மானியத்தை வழங்கினார்கள். அதனை 4.2.2023 அன்று முதலமைச்சரே நேரில் வழங்கினார். அதைத் தொடர்ந்து, 2023-2024 ஆம் நிதியாண்டிலும் 3 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஆண்டு தோறும் இந்த மானியம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது அறிவித்திருக்கிறார்கள். அதற்கு தஞ்சை மாவட்ட மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை பெரிய கோயில் பிரசித்தி பெற்ற கோயில். ஏராளமான வெளிநாட்டு பக்தர்கள், குறிப்பாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகின்ற பக்தர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறார்கள். ஆனால், இராஜராஜனால் கட்டப்பட்ட அந்தப் பெரிய ஆலயத்தில் இருந்த யானை இறந்துவிட்டது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் அவருடைய பரிசளிப்பாக அந்த யானையை, யானைக் குட்டியாக அந்தக் கோயிலுக்கு வாங்கிக் கொடுத்தார். இப்பொழுது அந்த யானை இல்லை. அவசியமாக, அனைத்து சிறப்புகளும் கொண்ட, இராஜராஜனால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோயிலுக்கு, யானை ஒன்றினை இந்து சமய அறநிலையத் துறை மூலமாகவோ அல்லது யாராவது தனியார் பங்களிப்போடு அவசியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.

அதேபோல, திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு தொகுதிகளில் ஏராளமான திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக, இந்து சமய அறநிலையத் துறைக்கும், அமைச்சருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி. சில கோரிக்கைகளை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். சில திருக்கோயில்கள் கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகள், 1,000 ஆண்டுகள், நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த கோயில்கள் என என்னுடைய மாவட்டத்தில் 4, 5 கோயில் திருப்பணிகள் விடுபட்டிருக்கின்றன. அவற்றில் திருப் பணிகள் .

அவற்றில் திருப்பணி செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, திருவையாறு தொகுதி, பூதலூர் வட்டம், பழைய ஆற்காடு கிராமத்தில் உள்ள அருள்மிகு ஆனந்தவள்ளி உடனுறை ஆனந்தபுரீஸ்வரர் கோயில் முற்றிலும் சிதிலமடைந்துள்ளது. அது சுமார் 2,000 ஆண்டுகள் பழமையான கோயில். அந்தக் கோயிலுக்கு 247 ஆண்டுகளுக்கு முன் திருப்பணி நடைபெற்றதாக கல்வெட்டில் இருக்கிறது. எனவே, அந்தக் கோயிலுக்கு திருப்பணி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, திருவையாறு தொகுதியில் அரசகுடி என்று ஒரு கிராமம். அங்குள்ள வீற்றிருந்த பெருமாள் கோயில் என்ற கோயிலில் விக்கிரகம் எல்லாம் உள்ளது. ஆனால், முகம்மதியர்கள் படையெடுப்பின்போது கோயில் முற்றிலுமாக அழிக்கப்பட்டதிலிருந்து, அந்தக் கோயில் கட்டப்படவில்லை. எனவே, அந்தக் கோயிலுக்கு திருப்பணி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, திருவையாறு தியாகராஜர் வாழ்ந்த வீதியில், திருமஞ்சன வீதியில் அவர் பூஜித்த காசி விஸ்வநாதர் கோயில் ஒன்று இருக்கிறது. அது பூட்டிக் கிடக்கிறது. அந்தக் கோயிலும் சிதிலமடைந்திருக்கிறது. அந்தக் கோயிலுக்கும் திருப்பணி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஒரத்தநாடு தொகுதியில், வாளமர்கோட்டை என்று ஒரு பிரசித்தி பெற்ற ஊர். அங்கு, அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயில் கோயில் பழுதடைந்திருக்கிறது. அதையும் திருப்பணி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு வட்டம், கீழ வன்னிப்பட்டில் அருள்மிகு அம்பலவன நாத கோயில் என்று ஒரு பழமையான கோயில் உள்ளது. அதுவும் சிதலமடைந்தி ருக்கிறது. அதையும் துறையின்மூல மாக திருப்பணிகள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருவையாறு தொகுதி, பூதலூர் வட்டம், பூதலூரில் உள்ள அருள்மிகு நாகநாதர் கோயில், அருள்மிகு நாச்சியாரம்மன் கோயில், கோவில்பத்து கிராமத்திலுள்ள ஆபத்சகாயேஸ்வரன் கோயில் மிகவும் சிதலமடைந்து திருப்பணி நடைபெறாமல் உள்ளது. இதனை துறையின்மூலம் திருப்பணி மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு ஆலயங்களுக்கு இராஜகோபுரங்களை எழுப்பி வருகிறார். அப்படி இராஜகோபுரங்களை எழுப்புவது அந்த ஆலயங்களுக்கு, பொது மக்கள் மற்றும் பக்தர்களிடையே மிகப் பெரிய வரவேற்பை பெற்றிருக்கிறது. அந்த ஆலயத்திற்கும் மேலும் சிறப்பு சேர்க்கிறது.

மாமன்னன் இராஜராஜனுக்கு குல தெய்வம் வல்லம் அருகே மொன்னையம்பட்டி என்ற ஒரு கிராமத்திலே பிரசித்தி பெற்ற ஏகோரி அம்மன் கோயில் இன்றைக்கும் இருக்கிறது. இராஜராஜன் எப்போதெல்லாம் போருக்கு செல்வாரோ அப்போதெல்லாம் அவருடைய போர்வாளை அருள்மிகு ஏகோரி அம்மன் கோயிலிலும், பட்டீஸ்வரம் அருள்மிகு துர்கை அம்மன் ஆலயத்திலும் வைத்து பூஜை செய்துவிட்டு போருக்குச் சென்று வெற்றிபெற்று, மீண்டும் வெற்றிபெற்றதற்குப் பிறகு, அந்த ஆலயங்களுக்கு நன்றி செலுத்த வருவதாக குறிப்பேட்டில் இருக்கிறது. அந்த ஏகோரி அம்மன் ஆலயத்தில் இராஜகோபுரம் இல்லை. இப்போது, நம்முடைய அமைச்சர் அவர்கள் 2 கோடி ரூபாய் நிதி வழங்கி, அங்கே திருப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அங்கே இராஜகோபுரத்தைக் கட்டுவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாரனேரி கிராமத்தில் சோழ மன்னர்கள் கட்டிய பசுபதீஸ்வரர் கோயிலுக்கு இராஜகோபுரம் அமைக்க வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நிதி வழங்கி, அங்கு திருப்பணிகள் நடைபெற்றுவிட்டன. ஆனால், அங்கே இராஜகோபுரம் இல்லை. எனவே, மாரனேரி கிராமத்தில் அருள்மிகு பசுபதீஸ்வரர் கோயிலுக்கு இராஜகோபுரம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பூதலூர் வட்டம், வளம்பகுடி கிராமத்தில் உள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் கோயிலுக்கு இராஜகோபுரம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய துறையின்மூலம் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு பொது மக்களிடத்திலே, ஏழையெளிய மக்களிடத்திலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. உதாரணமாக, என்னுடைய தொகுதியிலுள்ள திருக்காட்டுப்பள்ளி அருகே வாத்தலை நாச்சியம்மன் கோயிலில் கிட்டத்தட்ட இரண்டரை கோடி ரூபாய் நிதியில் திருமண மண்டபம் கட்டி முடிக்கக்கூடிய தருவாயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏழையெளிய மக்கள், குறிப்பாக ஆதி திராவிட, விளிம்பு நிலை மக்கள் அனைவரும் அந்தக் கோயிலில் தாலிக் கட்டிவிட்டுதான், திருமண மண்டபங்களுக்கு செல்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அந்தக் கோயிலுக்கு அருகே அந்த மண்டபத்தைக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

அதேபோல, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய குல தெய்வம் திருக்காட்டுப்பள்ளி அருகே, நேமம் கிராமத்தில் அருள்மிகு நல்லசேவு அய்யனார் கோயில் இருக்கிறது. நம்முடைய செந்தில் தன்னுடைய குழந்தைக்கு முதன் முதலில் அங்குதான் மொட்டை போட வந்தார். நல்ல வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் கோயிலில் திருப்பணிகள் நடைபெற்று விட்டன. அந்தக் கோயிலிலும் திருமணங்கள் எல்லா சமூகத்தினரும் நடத்துகின்றனர். அங்கே ஒரு திருமண மண்டபம் கட்டித் தர வேண்டும்.

### மாரியம்மன் கோவிலுக்கு திருமண மண்டபம்!

அதேபோல, வளம்பகுடியில் உள்ள மாரியம்மன் கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டித்தர வேண்டும். வீரசிங்கம் பேட்டை, மாரியம்மன் கோயிலுக்கு துறையின் மூலம் திருமண மண்டபம் கட்டித்தர வேண்டும். அதேபோல, மொன்னையம்பட்டி கிராமத்தில் உள்ள ஏகோரி அம்மன் கோயிலுக்கு ஒரு திருமண மண்டபம் கட்டித்தர வேண்டும். விரைவில் உரையை முடித்து விடுகிறேன்.

அதேபோல, பல இடங்களில் அர்ச்சகர்கள் மற்றும் பட்டாச்சாரியார்கள், அந்த ஊரில் குடியிருக்க முடியாமல் வெளியூரிலிருந்து வருவதால், கோயிலுக்கு உரிய நேரத்தில் வர முடிய வில்லை. அப்படி, தோகூர், பெருமாள் கோயில் அர்ச்சகர்/பட்டாச்சாரியருக்கு ஒரு குடியிருப்பும், திருவையாறு வட்டம், திங்களூர் வரதராஜபெருமாள் கோயிலுக்கும், சண்டியூர் ஹரசாப விமோசன பெருமாள் கோயிலுக்கும், திருவையாறு வட்டம், செந்தலை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலுக்கும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோயிலுக்கு திருத்தேர் வழங்குவதைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு பல ஊர்களிலுள்ள திருக்கோயில்களுக்கு திருத்தேர்கள் வழங்கியிருக்கிறது. உதாரண மாக, என்னுடைய மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒக்கநாடு கீழையூரில் கிராம மக்கள் சொந்த செலவில் மிகப் பெரிய தேரை அமைத்திருக்கிறார்கள். அதேபோல, காசவளநாடு என்ற பெரிய ஊரில் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி கோயிலுக்கு நம்முடைய துறையின்மூலம் ஒரு தேர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலின் சார்பில் மனநல காப்பகம், கல்லூரிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் செலவினம் அதிகமாக வருகிறது. இப்போது கோயில் ஆண்டு வருமானத்தில் 20 சதவிகிதம் வழங்குகின்றனர். அதை 30 சதவிகிதமாக உயர்த்தித் தரவேண்டும்.

### முக்கிய கோவில்களுக்கு இராஜ கோபுரம் அமைப்பீர்!

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்

கிறையென்று வைக்கப் படும்”

ஐயன் திருவள்ளுவர்.

நாட்டையாளும் மன்னவன் செங்கோல் ஆட்சி புரிந்து சீரிய சீர்மிகு திட்டங்கள் வகுத்து, தம் ஆட்சித் திறத்தால் நல்லாட்சி தருபவரை மக்கள் இறைவனுக்கு இணையாக வைத்துப் போற்றுவர். இது நடைமுறை உண்மை. தமிழ்நாடு மக்கள் இறைவனுக்கு இணையாக நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் போற்றி புகழ்கின்ற னர்.

திருவையாறு வட்டம், நடுக்காவேரி அருள்மிகு ஹரிபிரமேஸ்வரர் கோயிலில் ராஜகோபுர கதவுகள், உட்பிரகார கருங்கல்தளம், புதிய வாகன மண்டபம் அமைத்துத் தர வேண்டும்.

பூதலூர் வட்டம், ஒரத்தூர் கிராமத்திலுள்ள சேப் பெருமாள் அய்யனார் ஆலயத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் வட்டம், திருவேதகுடி அருள்மிகு வேதபுரீஸ்வரர் ஆலயம் மற்றும் திட்டை அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் குரு ஆலயத்திற்கு தகர கொட்டகை அல்லது கான்கிரீட் கூரை அமைத்துத்தர வேண்டும்.

திருவையாறு வட்டம், சண்டியூர் அருள்மிகு ஹரசாப விமோசன பெருமாள் ஆலய திருக்குளங்களி லுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, குளங்களை தூர் வாரி சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சை பெரிய கோயில் முன்பு ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க, அங்குள்ள போக்குவரத்தை மாற்றி ராஜா மிராசுதார் மருத்துவமனையையொட்டி புதிய மாற்று பாதை அமைக்க வேண்டும்.

வேளாண்கண்ணி கோயில், திருக்கக்காட்டுப் பள்ளி பூண்டி மாதா கோயில் மற்றும் கல்லணையை வழியாக திருச்சி செல்லும் பக்தர்களின் வசதிக்காக சாலை மற்றும் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டும்.

கல்லணையில் சுற்றுலாப் பயணிகள் ஈர்க்கும் வகையில் தங்கும் விடுதி வசதி, பூங்காக்கள் சிறப்புடன் அமைத்து தர வேண்டும்.

கல்லணையில் வெண்ணாறு, கல்லணை கால்வாய் ஆற்றின் குறுக்கே ஒரு புதிய உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

கள்ளப்பெரமூர் ஏரியை சுற்றுலாத் துறை மற்றும் வனத் துறையுடன் இணைத்து பறவைகள் சரணாலயம், பூங்கா அமைத்து படகு போக்குவரத்து ஏற்படுத்தி தர ஆவன செய்ய வேண்டும்..

தஞ்சை மாரியம்மன் கோயில் உள்ள சமுத்திர ஏரியில் பூங்கா அமைத்து, படகு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தென்பெரமூர் கிராமம், வெண்ணாறு வெட்டாறு பகுதியில் பூங்கா, கழிவறைகள், ஓய்வறை, பயணியர் விடுதி அமைத்துத் தர வேண்டும்.

பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் க. செல்வராஜ் அவர்கள். (குறுக்கீடு) இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

பி.கே. சேகர்பாபு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, திருக்கோயிலுக்கு யானைகள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், ரூபாய் 60 கோடி செலவில், திருக்கோயிலிலிருந்து தெய்வமாகிவிட்ட 11 யானைகளுக்கும் மணிமண்டபம் கட்டுகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், திருக்கோ யிலில் இருக்கின்ற 27 யானைகள் குளுகுளு வென்று நீராடுவதற்கு குளியல்தொட்டியும் தந்த ஆட்சி தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சி என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். யானைகள் வழங்கக்கூடாது என்பதல்ல; வனத் துறைச் சட்டத்தின்படி, திருக்கோயி லுக்கு நேரடியாக யானைகள் வாங்குவதற்கு அனுமதி இல்லை. யாரேனும் தனியாக யானை வளர்த்துக்கொண்டிருந்தால், அவர்கள் திருக்கோயிலுக்கு தானமாக யானையை கொடுப்பதற்கு முன்வரு வார்களேயானால், சட்ட விதிகளின்படி முறையாக அனுமதி பெற்றிருந்தால், திருக்கோயிலுக்கு யானை பெற்றுக்கொள்ளப்படும். அதேபோல, இந்தத் துறையின் சார்பாக உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்காத இடங்களே இல்லை. திருத்தேரைக் கேட்டார், திருக்குளங்களைக் கேட்டார், திருப்பணி களை கேட்டிருக்கின்றார். உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில்மாத்திரம் சுமார் 25 கோயில்களுக்கு 30 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களில் சுமார் 25 கோடி ரூபாய் செலவில் பணிகளை மேற்கொண்டிருக்கின்றோம். குட முழுக்கு குறித்த புள்ளி விவரத்தை சொல்லுகின்றபோது, அவர் ஏறத்தாழ 1,700 என்று குறிப்பிட்டார். இதுவரையில் jet வேகத்தில் சென்று கொண்டிருக்கின்ற இந்த ஆட்சி 1,804 திருக்கோயில்களில், இன்றைய தினம் வரையில் குட முழுக்கு நடத்தி முடித்தி ருக்கின்றது. அதேபோல், கோயில் சொத்துக்களை மீட்டெடுத்த புள்ளி விவரங்களை குறிப்பிடும்போது, 6,000ற்குள் கூறினார். ஆனால், இதுவரையில் 6,004 கோடி ரூபாய் அளவிலான திருக்கோயிலினுடைய சொத்துக்கள் ‘இறை சொத்து இறைவனுக்கே’ என்கிற தாரக மந்திரத்தோடு மீட்கப்பட்டிருக்கின்றன என்பதையும், உறுப்பினர் அவர்கள் கூறிய அனைத்து திருப்பணி களும் மேற்கொள்ளப்படும் என்பதையும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு துரை. சந்திரசேகரன் பேசினார்.





விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை தெற்கு ஒன்றியம் காங்கியனூர் ஊராட்சியில் பூத் எண் 76 மற்றும் 77 வாக்குச்சாவடிகளில் தி.மு.க. கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை ஆதரித்து விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.கௌதம சிகாமணி, விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன், உதய சூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். உடன் காணை தெற்கு ஒன்றிய செயலாளர் கல்பட்டு ராஜா, இ.ஏ.பி. சிவாஜி ,மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல். ரவி, டாக்டர்.பரிமளம்விஸ்வநாதன், பா.செ.குணசேகரன், மு.மணிபாலன், இரா.அறிவழகன், நா.செல்வசேகரன், டி.கே.சந்திரசேகர், கா.சு.ஜெகதீசன், க.தமிழ்உதயன், ந.மோகன்ராஜ், எம்.பாஸ்கரன், ஏ. கே.சம்பத், இளைஞர் அணி செ.யுவராஜ், எம்.கதிரவன், பரத்குமார், சந்திரமோகன், பழனி, அர்ஜுன், குப்பன் டி.கே.ராஜா, கௌதம், பரதன், தகவல் தொழில் நுட்ப அணி யுவராஜ், பாலா, நல்லசிவம், பத்மா பூபாலன், தயாளன், சாமிவேல், கரிமுல்ல மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.